# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி

## உண்மைப் பணியில் ஊடகங்கள்




### சமூகத் தொடர்புதினச் சிறப்பிதழ்

ஆகஸ்ட் 2008 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**HERO HONDA**

The Only Authorized Dealer for Honda & Hero Honda in Batticaloa

# Pattersons

175, Trinco Road,
Batticaloa
Tel: 065 2223794 Fax: 065 2226001

**Authorized Dealer for Hero Honda Sales, Service & Spare parts**

## *New Hero Honda Exclusive Show Rooms*

| Pattersons | Pattersons |
| --- | --- |
| 511, Manchanthoduwai, Batticaloa<br>Tel: 060-2658400 | 419, Trinco Road, Batticaloa<br>Tel: 060-2651666 |




HERO HONDA
Desh ki dhadkan

**Stafford Motor Company Ltd.**
**Colombo 10**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**ஆகஸ்ட் - 2008**

**மலர்- 40** **இதழ்- 07**



**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**

நிரோன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 02 |
| உண்மைப் பணியில்... | - | 03 |
| செய்திகளும் உண்மைகளும் | - | 04 |
| உண்மையும் சித்தரிப்பும் | - | 05 |
| திருப்பலியின்... | - | 06 |
| ஒன்னாம் ஆள் | - | 07 |
| சார்க் மாநாடு... | - | 08 |
| தினசரிப் பத்திரிகைகளின்... | - | 09 |
| ஒலிம்பிக் விளையாட்டு... | - | 11 |
| உலகச் செய்தி... | - | 12 |
| இலக்கிய மஞ்சரி | - | 14 |
| உங்கள் சுகமான... | - | 15 |
| நடனக் கலை... | - | 16 |
| கடுகுக் கதை | - | 18 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 19 |
| புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும்.. | - | 22 |
| மாணவர் பக்கம் | - | 23 |
| காட்டில் மறைந்த... | - | 24 |
| வாசிப்பின் மகிமை | - | 25 |
| விவிலியம் கற்போம்... | - | 27 |
| அறிவை வளர்ப்போம்... | - | 28 |


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

E.mail: scctribatti@gmail.com


விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

காலத்தின் அவசியமாகப் புகுந்துள்ள தொடர்பு ஊடகங்கள் எழுத்து, காட்சி, ஒளி, ஒலி என அனைத்துமே பின்வரும் நோக்கத்திற்கு உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள். அதாவது ஊடகங்கள் அனைத்துமே உறவாடவும், தாம் வாழும் உலகத்தைப் புரிந்துகொள்ளவும், தன்னை வளர்த்துக்கொள்ளவும் வேண்டிய நோக்கில் செயல் படவேண்டும் என்று கூறுகின்றனர்.

ஊடகங்கள் இன்றி வாழ்வே இல்லை என்று சொல்லும் அளவிற்குத் தொடர்பு ஊடகங்கள் தாக் கத்தைச் செலுத்துகின்றன. ஏனென்றால் ஒரு சராசரி மனிதனின் கலாசாரம், பண்பாடு, நடை, உடை, உணவு, இலக்கு, தேவைகள், சிந்தனை, போக்குகள் அனைத்தையும் நிர்ணயிப்பதும் இவைதாம்.

தொடர்பு ஊடகங்களும் கலாசாரமும் என்று ஆராயும்போது அவை இன்றைய சந்ததியின ருக்கு வன்முறைக் கலாசாரம் (Culture of Violence), வக்கிரப் பாலுணர்வுக் கலாசாரம் (Culture of Sex), எளிதாகப் பெறுகின்ற கலாசாரம் (Easy Culture) என்பவையையே காட்டுகின்றன. எனவே சமூகத்திற்கு எதிரான செயல்களிலும், மதிப்பீட்டைக் கேலிக்குள் ளாக்கும் செயல்களிலும், பணம், செல்வம் இவையே உலகம் என்றும் எதையும் செய்வதே சுதந்திரம் என்ற கலாசார உலகிற்கும் தள்ளப் படுவதை உணரலாம்.

ஆக, ஊடகங்கள் வாழ்க்கை முறைகளை நிர்ணயிப்பதில் ஆற்றும் பங்கு அளப்பரியது. ஆனால் சரியான பாதையைக் காட்டுகிறதா என்பதுதான் சந்தேகமளிக்கிறது. இன்றைய தொடர்பு உலகமா னது விரைவுக் கலாசாரத்தைப் புகுத்தியுள்ளது. புதினம், புதுமை, புது அனுபவம் என்ற பெயரில் பல குப்பைகளை நச்சாக அளிக்கிறது. விரைவான தீர்வுகள் வேண்டும் என்று பொறுமையில்லா உலகை உருவாக்கிக் கொண்டே வருகிறது. மனிதனின் நேரத்தையும், சமூக உறவுகளையும் இது பெருமளவில் பாதிக்கின்றது. அடுத்த மனிதனிடம் உரையாடவோ, உறவாடவோ நேரத்தை அளிப்பதில்லை.

இவ்வாறாக இன்றைய ஊடகங்கள் வன் முறை, புதினம், விரைவுத் தீர்வு, இவனே மனிதன் என்று புதிய வரைமாதிரிகளை அளித்து இன்றைய உலகை அவலத்திற்கு உள்ளாக்குவது கண்டிக்கத் தக்கது. அதனை வேரிலேயே வெட்டி எறிவது சம்மந் தப்பட்டவர்களின் உடனடிப் பணியாகும்.

வேதாகமத்தின் பக்கங்களைப் படித்துப் பார்த்தால் இயேசு சமூகத் தொடர்புகளுக்கு ஒரு மிகச்சிறந்த மாதிரி என்பதனை அறியலாம். சமூகத் தொடர்பின் நோக்கங்களை அறிந்தவராகவும், சமூகப் பொறுப்பு மிக்கவராகவும், உறவுகளை வளர்ப்பவராகவும், மக்கள் மொழியைப் பேசுபவராகவும், காலத்திற்கும், சூழலிற்கும், மரபுக்கும், மண்ணுக்கும் ஏற்ற தொடர் பியல் உத்திகளைக் கையாள்பவராகவும், தொடர்பிய லுக்குப் புதிய பரிமாணங்களை அளிப்பவராகவும் இருப்பதோடு எல்லாத் தொடர்புகளையும் விமர்சன நோக்கோடு பார்ப்பதையும் அறியலாம்.

ஆகவே, இயேசு ஆதிக்கப் பண்பாட்டை, மொழியைத் திணித்து மக்கள் மொழியை, கலையை அந்நியமாக்காமல் பாமர மக்களின் மொழியில் தொடர்பு கொண்டதை நாமும் மாதிரியாகக் கொள்வதோடு, சமூக அவலங்களை அநீதிகளை விமர்சனத்துடன் தட்டிக்கேட்கின்ற சிறந்த தொடர்பாளராக, ஊடகங் களைச் சிறந்த முறையில் கையாள்பவர்களாக விளங்குவோம்; வழிகாட்டுவோம்; அத்தோடு தட்டிக் கேட்போம்.

– ஆசிரியர்



## இறைவாக்கு

“உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்”

(யோவான்: 18:37)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உண்மைப் பணியில் ஊடகங்கள்'

## (42வது உலக சமூகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து)


திருத்தந்தையின் இச்செய்தி தனிமனித வாழ்விலும், சமூகத்திலும் சமூகத் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. சமூகத் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு, குறிப்பாக அறிவூட்டல் திறனையும் குடும்பங்களின் மேன்மையினை முன்னேற்றுவதில் இருக்கும் விசேட பொறுப்புணர்ச்சியையும் அதன் தெளிவான எதிர்பார்ப்புகளையும் உரிமைகளையும் அதன் முழு ஆளுமையில் வெளிப்படுத்துகின்றது. செய்திகளையும் அறிவுசார் உண்மைகளையும் தகவலாகப் பரப்புவதில் தொடர்பு சாதனங்களின் தீர்க்கமான பங்களிப்பினை முன்னிறுத்தும் திருத் தந்தை, தொடர்பு சாதனங்களின் செயல்பாடுகளாகப் பகுத்தறிவையும், சமூகவியலாக்கத்தையும், ஜனநாயக முன்னேற்றத்தையும், மக்களிடையிலான தொடர் பாடலையும் பரப்பும் கருவியாகக் காண்கிறார்.

பொதுவாக நோக்கும்போது ஊடகங்கள் கருத்துகளைப் பரிமாற்றும் கருவிகளாக மட்டுமல் லாது உயர்ந்த சமூக நீதியையும் தோழமையையும் அளிக்கும் கருவிகளாக அமைய வேண்டும். மாறாக ஊடகங்கள் கருத்தியல் தேவைகளையும் அல்லது பொருட்களின் விளம்பரங்களையும் உத்வேகத்தோடு புகுத்தப் பயன்படுகிறது. இதனால் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வின் பரிணாமங்களைச் சீர்குலைக் கவும் பயன்படுகிறது. ஊடகப் பயன்பாடானது முன் னேற்றத்தின் மாதிரியாகச் செயற்பட்டு ஏழை, வறிய நாடுகளுக்கிடையிலான பிளவினை அதிகரிக்கின்றது.

இவ்வூடகங்கள் மனிதனின் தேவைக்கும் பொது நன்மைக்கும் அவனது ஒழுக்கவியல் மேம் பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பயன்படக் கூடாதா? என்ற ஆதங்கத்தைத் திருத்தந்தை வெளிப்படுத்துகிறார்.

இக்கால ஊடகச் செயற்பாடானது யதார்த் தத்தைப் பரதிநிதிப்படுத்துவதைவிட அதைத் தீர்மானிப் பதில் வெகுவாகச் செயல்படுகின்றது. நிகழ்வுகளைப் பொருத்தமான தகவல்களுடன் பரப்புவதைவிட நிகழ்வுகளை உருவாக்குதில் கருத்தாய் இருப்பது அபாயமானதொரு மாற்றமாகும்.

சமூகத் தொடர்பு சாதனங்கள் ஒன்றிணைந்த மானிடவியல் கேள்விகளை எழுப்புவதிலும், சவால் தொடுப்பதிலும் தனது செயல்பாட்டை காண்பிக்கும் யுகமாக மூவாயிரமாம் ஆண்டு திகழ்கிறது. தற்கால சமூக யதார்த்தங்களாகிய திருமணம், குடும்பம்,



அமைதி, நீதி, பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவது போல தனிமனிதன், அவனைப் பற்றிய உண்மைகளையும் கருத்தில் கொள்ளவேண்டி யதாக இருக்கிறது. மனிதனின் உண்மைக்கான தாகம், தேடல், சிறப்பாக வெளியீடுகள் நிகழ்ச்சிகளிலும் வெளிப்படுகின்றது. "உண்மையை நீ அறிவாய் அவ் வுண்மை உனக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32) என்னும் இறைவார்த்தைகள் மனிதனின் வாழ்வை நோக்கிய தேடலையும் அவன் இதயத்தில் இருக்கும் அன்பினையும் கிறிஸ்துவே இவ்வுண்மை என்பதையும் நிலை நாட்டுகின்றது. கிறிஸ்துவுக்கும் மனிதனுக்கு மிடையில் ஏற்படும் சந்திப்பு உற்சாகத்தோடு இவ்வுண் மையை ஏற்றுக்கொள்வதிலும் அதை அடுத்தவருக்குக் கொடுப்பதிலும் தங்கியுள்ளது.

இறுதியாக திருத்தந்தை துணிவுள்ள தொடர்பாளர்களையும், நம்பத்தக்க சாட்சிகளையும், உண்மையின் சாட்சிகளையும், கிறிஸ்துவின் கட்ட ளைக்குப் பிரமாணிக்கமுள்ள ஊக்கமுள்ள தொடர்பாளர் களையும் உயர்த்திவிடுமாறு தூய ஆவியானவரிடம் மன்றாடுகின்றார். இவர்கள் தற்காலக் கலாசாரத்தின் தேவைகளைப் பொருளுணர்த்தி தொலைத் தொடர்பு சாதன யுகத்தை குழப்பங்களுடன் அந்நியப்படுத் தாது உண்மையைத் தேடும் விலையுயர்ந்த நேரமா கவும் மக்கள் மத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகவும் பயன்படுத்த அழைப்பு விடுக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகளும் உண்மைகளும்




செய்திகள் வெளிவரும்
ஆயுதக் கிடங்கு தாக்கி அழிப்பு
தற்கொலைப் பயிற்சிமுகாம் தாக்கி அழிப்பு
பதுங்கு குழிகள் தாக்கி அழிப்பு
ஆனாலும் என்ன?
குண்டு வெடிப்புகள் தொடரும்
தாக்குதல்களும் தொடரும்
எனவே செய்திகள் பொய் ஆகின்றன
இந்தப் பொய்கள் தொடரும்வரை
பிரச்சினை தீரவே தீராது
உயர் அதிகாரிகள் இதை உணர்வார்களா?
பொய்கள் கூறிப் பொதுமக்களை
ஏமாற்றுவதை விட
உண்மைகளைக் கூறி
யதார்த்தத்தை நிலைநாட்டுதல்
பிரச்சினையைத் தீர்க்க உதவலாம்
எதிரியின் பலவீனங்களைப்
பிரசாரம் செய்வதைவிட
பலத்தை அறிந்துகொள்வது
அதற்கேற்ப நடவடிக்கைக்கு உதவும்
வாய்ச் சவடால்கள் தாக்குதல்களுக்கு
வழிவகுப்பதை நாம் பார்க்கின்றோம்
வாய் வீரம் பேசுவதில் என்ன பயன்?
எதிரிகளை ஆத்திரமூட்டி மென்மேலும்
தாக்குதல்களை அதிகரிக்கத்தான்
அவை உதவும், எனவே
வாய் வீரம் பேசி வாங்கிக் கட்டிக்கொள்ளாமல்
பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி பாருங்கள்
தமிழர்களின் உரிமைகளை
நிர்வாக மட்டத்தில் வழங்கி
நடைமுறையில் சமாதானத்திற்கு
வழிவகுக்கப் பாருங்கள்






— தமிழன்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்பதே தத்துவத்தின் தேடலாகவும் கடவுள் என்பதே மதங்களின் தேடலாகவும் உள்ளது. இவை எல்லாச் சொல்லாடல்களிலும் அதிகம் நிறைந்துள்ளது. அறிவியல்கூட புறயதார்த்தத்தை முற்றாக அறியும் முயற்சியில்தான் நடைபோடுகிறது. புறத்தோற்றத்துக்கு அடிப்படையாக உள்ள அகத் தோற்றம் காண்பதே அறிவியல் பார்வையாக உள்ளது. ஆனால் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் அதற்குப் பின்வருகின்ற கண்டுபிடிப்பால் புறந்தள்ளப்படுகின்றது. நுண்ணோக்கி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு புற உண்மை வேறானதாக இருந்தது. கண்டுபிடிக்கப் பட்டவுடன் புற உண்மை முற்றாக மாறிவிட்டது. நுண்ணோக்கி மூலம் அறிதல் அதுவரையான அறிவைக் கேள்விக்குள்ளாக்கியது. மீண்டும் ஒரு கேள்வியை இங்கு நாம் எழுப்பிப் பார்க்கலாம். ஒளியின் வேகம் கூடினாலோ குறைந்தாலோ இந்தப் புற உலகம் இப்போது இருப்பதுபோல நமக்குக் காட்சி அளிக்காது எனில் எதுதான் நிரந்தரப் பிரபஞ்ச உண்மை? இதைத் தேடுவதுதான் மனித வாழ்வில் ஒட்டுமொத்த வேட்கையாக உள்ளது. உண்மை பற்றிய கேள்வியைச் 'செய்தி'க்குப் பொருத்திப் பார்ப்போம்.




– சிவக்குமார் –

நேற்று நகரத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. மறுநாள் காலை அது செய்தித் தாள்களில் வந்துள்ளது. சரி, நான் ஒரு செய்தித்தாள் வாங்குகிறேன். நீங்கள் பிறிதொரு செய்தித்தாள்; அவர் மூன்றாவதாக ஒன்று; இவர் நான்காவதாக ஒரு செய்தித்தாள். ஒரேயொரு செய்தித்தாளை மட்டுமே வாசித்துவிட்டால் பிரச்சினை இல்லை. அச்செய்தித்தாள் கூறியுள்ளது எல்லாம் உண்மை என ஏற்றுக்கொள்ளுகிறோம். அவ்வாறு இன்றி ஒருவருக்கு இந்த நான்கு செய்தித் தாள்களும் கிடைத்து அவர் படிப்பதாகக் கொள்வோம். நகரத்தில் நடந்த இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தி:

பத்திரிகை 'அ'வில் முதல் பக்கத்தில் மூன்று பத்திச் செய்தியாகவும் செய்தித்தாள் 'ஆ'வில் மூன்றாம் பக்கத்தில் இரு பத்திச் செய்தியாகவும் செய்தித்தாள் 'இ'யில் செய்தியாக இல்லாமல் நான்காம் பக்கத்தில் ஒளிப்படமாகவும் வெளியாகி உள்ளது. செய்தித்தாள் 'ஈ' யில் அச்செய்தி இடம் பெறவில்லை.

இப்பொழுது எழும் கேள்வி எந்தச் செய்தித்தாள் அந்தச் செய்தியை நடந்தவாறே உண்மையைச் சார்ந்து வெளியிட்டுள்ளது? செய்தித்தாள் 'ஈ' ஏன் அச்செய்தியை வெளியிடவே இல்லை? இவற்றை வைத்துக்கொண்டு நாம் இரண்டு தற்காலிக முடிவுக்கு வருவோம்.

1. முழு உண்மையை ஒரு செய்தித்தாள் தந்துவிட முடியாது.
2. முழு உண்மை என்பது அனைத்துச் செய்தித்தாள்களின் அந்த நிகழ்ச்சி பற்றிய சித்தரிப்பின் கூட்டுச் சராசரி.

இரண்டு முடிவுகளுமே நம்மைத் திகைக்க வைக்கின்றன. நான் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அனைத்துச் செய்தித் தாள்களையும் வேண்டியாக வேண்டுமா? அல்லது ஒரேயொரு செய்தித்தாள் தருகின்ற பகுதி உண்மை மட்டும் போதுமா? இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. இந்த முடிவுகள் மொழியின் சித்தரிப்பு எல்லை பற்றி யோசிக்க வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பலியின் விழுமியங்கள்

- மற்றில்டா இராஜேந்திரம்

நாம் பக்தியோடு பங்குபற்றிய திருப்பலிகள் மரணவேளையில் நமக்கு நிறைந்த ஆறுதலைத் தரும்.

நாம் காணும் ஒவ்வொரு திருப்பலியும், தீர்வையின்போது எம்முடன் நின்று மன்னிப்பைப் பெற்றுத்தர இறைவனை வேண்டும்.

பக்தியுடன் திருப்பலிக்கு உதவி புரிபவர்கள், நமதாண்டவரின் புனிதமான மனிதத்துவத்திற்கு மிகப்பெரும் ஆராதனையைப் புரிகின்றார்கள்.

அவர் எமது எல்லா அற்ப பாவங்களையும், பாவசங்கீர்த்தனத்தில் சொல்லாத பாவங்களை ஈறாக மன்னிக்கிறபடியால் சாத்தானின் சக்தி வலுவிழந்து போகிறது.

நாம் உயிரோடு இருக்கையில் ஒப்புக்கொடுத்த ஒரு திருப்பலி நம் மரணத்தின் பின் ஒப்புக்கொடுக்கப்படும் பல திருப்பலிகளைவிடப் பயன் மிக்கது.

திருப்பலிவேளையில் நாம் ஆயிரக்கணக்கான வானதூதர்களோடு முழந்தாட்படியிடுகிறோம். அவர்கள் மாபெரும் மதிப்புமிக்க பலியில் வணக்கத்துடன் சமூகமளிக்கின்றனர்.

நமது உடைமைகள் வாழ்வின் நிகழ்வுகளனைத்தும் ஆசீர் பெறுகின்றன.

திருப்பலியினூடாக இயேசு பெருமான் எமது ஆதரவின்மை, கைவிடப்பட்ட தன்மைகளுக்கும் அருள் தருகிறார்.

பக்தியுடன் திருப்பலியை செவிமடுக்கையில் ஆன்மாக்கள் மாபெரும் மீட்படைகின்றன.

திருப்பலியின் மூலமாக எமது பாவங்கள் சிறியளவோ அதிகமோ அவற்றுக்கான தண்டனைகளிலிருந்து காக்கப்படுகின்றோம்.

திருப்பலியானது நம்மை துரதிர்ஷ்டங்கள், ஆபத்துகள் ஆகியவற்றில் வீழ்ந்துவிடாமல் காக்கிறது.

திருப்பலி எமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் உயிருள்ள பலியாகும்.

பக்தியுடனும், உரத்தகுரலிலும் சொல்லப்படும் பதில்களின் மூலம் பயன்களைப் பெறமுடிகிறது.

அன்னை மரியா தம் மகனுடன் பீடத்திலிருந்து தம் பிள்ளைகளை அவதானிப்பதால் நமது எண்ணங்கள், செயல்கள் அனைத்தும் அவரைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் சிறுகதை

# ஒன்றாம் ஆள்

- க. கியூரி -

ரீங்....உர்......ரிங்...... அலாரம் தனக்குத்தான் வாய் இருக்கிறது என்று அலறியதில் விழித்துக்கொண்டார் கந்தசாமியண்ணன். "காலங்காத்தால இது வேற" முணுமுணுப்புடன் அலாரத்தைத் தட்டினார். கொட்டாவியுடன் சோம்பல் முறித்த வேகத்தில் எழுந்தார். பாய்க்கும், தலையணைக்கும் உதை விட்டார். உதைக்குப் பயந்த அவை மூலைக்குள் சுருண்டுகொண்டது. அவசரமாகக் கடமைகளைச் செய்யத் தொடங்கினார். கரித்துண்டால் பற்களை மேலும் கீழுமாக இரண்டு இழுவை இழுத்தார் அவ்வளவுதான். தண்ணீரால் குளக்குளக்கென்று கொப்பளித்து சோப் போடாமல் முகத்தைக் கழுவி பென்சன் கொடுக்கவேண்டிய துவாயால் முகத்தை ஒற்றினார். மச்சிங் இல்லாத ஏதோ ஒரு சோடி உடுப்பைப் போட்டு தலைவார முடியாத வழுக்கையை ஐந்தாறு பல்லில்லாத சீப்பினால் வாரினார். பவுடர் டப்பாவை நாலு தட்டு தட்டி மூன்று சொட்டுப் பவுடர் தூளை முகத்தில் தேய்து சோடாபுட்டிக் கண்ணாடியை அணிகையில் மனுசி மங்கம்மா கொடுத்த சீனியில்லாத ஆறிப்போன தேத்தண்ணிய மடக்கென்று உறிஞ்சினார்.

"இஞ்சாருங்கப்பா மணியண்ணன் கடைக்குப் போட்டு....." அவள் முடிக்கவில்லை.

"இஞ்ச பாரு மங்கம்மா இன்டைக்கு எந்த வேலையும் சொல்லாதே. நான் அவசரமாப் போகோணும்" நடந்துகொண்டே கத்தினார்.

"ஏனப்பா என்ன விசயம்"

"உனக்கு நாட்டு நடப்பு எங்க தெரியுது. இண்டைக்கு எலக்ஷன் எல்லா"

"ஓமப்பா மறந்தே போயிற்றன்"

"சரி சரி கதைச்சிக்கொண்டிருக்க நேரமில்ல நான் போட்டு வாரன்" தேஞ்சுபோன செருப்பை மாட்டினார்.

"ஏனப்பா காலங்காத்தால போறியள்..?"

"என்னது காலங்காத்தாலயா.... மணியப் பாரு"

"என்னப்பா தெரியாத மாதிரி கேக்கிறியள். எனக்குத்தான் மணி பாக்கத் தெரியாதே"


"கறுமம் கறுமம்" தலையில் அடித்துக்கொண்டார்.

"ஏனப்பா எனக்கும் மணி பாக்கச் சொல்லித் தாங்கோவன்"

"ஓம் ஓம் இப்ப இது முக்கியமாக்கும். சே... இப்பவே 6.30. நான்தான் முதல் லைன்ல இருந்து முதலாவதா வோர்ட் போடவேணும். நான் வாரன்" போகும்போது "கடவுளே நான்தான் முதலாம் ஆளா வோர்ட் போடோனும்" மன்றாடிக்கொண்டே போனார்.

"இவருடைய வோர்ட் மட்டுமே செல்லுபடியாகும் என்டு நினைக்கிறார் போல" மனசுக்குள் சொல்லிக்கொண்டாள் மங்கம்மா.

ஒரு வழியாக வாக்களிப்பு நிலையத்தில் முதல் வரிசையில்



தொடர்ச்சி 13ம் பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் முதலில் உலகில் வெளியான தினசரிப்பத்திரிகை டசிங்பர். இது ஆறாம் நூற்றாண்டில் அரசபத்திரிகையாக சீனாவின் தலைநகரான பீஜிங்கில் வெளியானது. உலகில் அதிக பக்கங்களைக் கொண்ட பத்திரிகை த நியுயோர்க் டைம்ஸ் என்ற பத்திரிகை. 946 பக்கங்களைக் கொண்டதாம். இதன் நிறை 16.4கிலோ. 1965ல் முதல் முதலில் வெளியானது, 946 பக்கங்களைப் பொறுமையாகப் படிப்பதற்கு அமெரிக்காவில் அறிவாளிகள் நிறையவே உண்டு. எமது இலங்கை நாட்டவர் எப்படி? அதிகம் வாசிப்பதைவிட பிறரது ஆவலாதி, அவதூறுகளை அதிக நேரம் அலட்டி அவர்களது நன்மதிப்பிற்கே ஆப்பு வைத்துவிடுவார்கள். உலகில் பிளாஸ்டிக் பத்திரிகையும் உண்டு. மழையிலும் படிக்கலாம். நீச்சல் தடாகத்தில் நீந்திக்கொண்டும் படிக்கலாம். இத்தாலியில் வெளியாகும் பிரபல்ய பத்திரிகை இதுவாம். உலகில் மிகச்சிறிய பத்திரிகை ரோம் நகரிலிருந்து வெளியாகும் டயோடியோ டிரோமா. இதன் நீளம் 12.7cm அகலம் 6.8cm. உலகில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை ஜப்பான் நாட்டுத் தினசரி 'யோமுரி ஷிம்பன்' ஒவ்வொரு வருடமும், 14 கோடி பிரதிகள் விற்பனையாகிறதாம். உலகிலேயே சனத் தொகை கூடிய நாடு சீனா ஆனால் பார்க்கப் போனால் ஜப்பானில்தான் வாசிப்பவர்கள் மிக அதிகமுண்டு போலத் தெரிகிறது.


வாசிப்பதால்தான் மனிதன் பூரணமடைகிறான்.
வாசிக்க வாசிக்கத்தான் ஒருவனுக்குத்
தன்னிடம் இருக்கும் அறிவு
மிகமிக அற்ப மென்றும்
அறியவேண்டியது
அளவிட முடியாதது என்றும் தெரியவரும். உலகில் அதிகம் விற்பனையான பத்திரிகை "டெலிவிஷன் கைட்".

முதல் முதலில் குறுக்கெழுத்துப் புதிர் வெளியான பத்திரிகை 1913 டிசம்பர் 21ல் "நியூயோர்க் வேர்ல்ட்" என்ற பத்திரிகை. இக்குறுக்கெழுத்துப் புதிரை உருவாக்கியவர்: அத்தர் வின்.

- இரண்டு விலையுள்ள பத்திரிகை:
  ஜேர்மனியின் "கசேந்திர"
  பெண்களுக்கு - 1.25 மார்க்
  ஆண்களுக்கு - 1.50 மார்க்
- உலகில் முதல் முதல் காகிதத்தை உருவாக்கி அறிமுகப்படுத்தியவர் சீனாவைச் சேர்ந்த "சாய்லூன்" என்ற அறிஞர்தான். இவர்தான் நாம் இலகுவாக அறிவைப் பகிர்ந்துகொள்ள வழிகோலியவர்.
- உலகில் பெரிய நூலகம்: "அமெரிக்க காங்கிரஸ் நூலகம்" தான்.
- 2000ம் ஆண்டு அதிரடி விற்பனையான சாதனைப் புத்தகம் எதுவென்று தெரியுமா?

HARRY POTTER AND THE GOBLET OF FIRE (ஹாரி பொட்டர் அன் த கொப்லெட் ஒப் ஃபயர்) என்ற நாவல். இது இப்போது சினிமாப் படமாகி சாதனையும் படைத்துவிட்டது. 200 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 68 மில்லியன் புத்தகங்கள் 2000ம் ஆண்டே விற்பனையாகியும் உள்ளது. இதை எழுதியவர் ஒரு பெண் எழுத்தாளர் ஜே. கே ரோவ்லின். 2000ம் ஆண்டு மட்டும் இவருக்கு 33 மில்லியன் வருமானம் கிடைத்ததாம்.

- ஓர் எழுத்தாளருக்கு மரண தண்டனை கூடக் கிடைத்துள்ளது. "சைத்தானின் வசனம்" என்னும்



# தினசரிப் பத்திரிகைகளின் சிறப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை எழுதியதற்காக ஈரான் அரசின் தலைவராக இருந்த ஆயத்துல்லா கொமேனியால் மரண தண்டனை விதிக்கப்பட்டார். அவர்தான் 'சல்மான் ருஷ்தி'. இதேபோல தஸ்லிமா நஸ்ரின் பங்களாதேஷ் நாட்டவர், "லஜ்ஜா" என்ற நூலை எழுதியதால் பிரச்சினை தலைதூக்கி நோர்வேயிற் தஞ்சம் புகுந்தார்.

எழுத்தை ஆளுமை செய்யும்போதுகூட ஆபத்துமுண்டு. நீங்கள் எழுதாவிட்டாலும் பரவாயில்லை. நன்றாக வாசியுங்கள். நிச்சயம் நாடு கடத்தப்படமாட்டீர்கள்.

வயலற் சந்திரசேகரம்

# றேடியோவில் F.M ?

F.M என்றால் Frequency Modulation. இதற்குப் 'பண்பலை' என்று பெயர் வைத்துள்ளார்கள். இப்பெயர் இதற்குப் பொருத்தமில்லை என்று கூறுவோரும் உண்டு. நமது நாட்டில் பெரும்பாலான ஒலிபரப்புகள் இந்த வகையைச் சேர்ந்ததுதான். மோடுலேசன் என்றால் பண்பேற்றம் என்று கூறுவதே சரி. இது என்னவென்று பார்ப்போம்.

கொழும்பில் ஒரு ஸ்ரூடியோவில் பாடுவது பொத்துவில்லில் கேட்கவேண்டும் என்றால் கத்திப்பாட முடியாது அல்லவா? அதனால் பாட்டை மின்னலைகளாக மாற்றி 'கேரியர்' என்கிற றேடியோ வேகக் குதிரைமேல் ஏற்றி அனுப்புகிறார்கள். இதுதான் மோடுலேசன். இப்படி அனுப்புவதில் இரண்டு முறைகள் உள்ளன. A.M, F.M என்று. ஏ.எம் என்பது அப்படியே றேடியோ அலைகள் முதுகில் பாட்டு அலைகளை ஏற்றி அனுப்புவது. எவ். எம் என்பது றேடியோ அலைகளுக்குள் பாட்டைக் கொஞ்சம் ஒளித்து அனுப்புவது. இப்படி அனுப்பினால் பாட்டு அதிகம் சேதப்படாமல் போய்ச் சேரும். கேட்பதற்கும் மிக நன்றாக இருக்கும்.

# அமைதியை வளப்படுத்தும் ஒலிம்பிக் போட்டிகள்

ஒலிம்பிக் போட்டிகளும், விளையாட்டுகளும் பொதுவில் வாக்குவாதங்களையும் முரண்பாடுகளையும் அல்ல மாறாக அமைதியையும் உரையாடலையும் வளப்படுத்தும் செயற்பாடுகளாய் அமையவேண்டுமென்று வத்திக்கான் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

செயற்பாட்டாளர்களும், ஒரு சில அரசியல் தலைவர்களும் சீனாவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உயர் பதவி வகிப்போர் இதில் பங்குபற்றுவதைத் தவிர்க்கவேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தனர். இது தமக்குக் கவலை அளிப்பதாகக் குறிப்பிட்ட இத்தாலியக் கருதினால் றெனால்டோ மாட்டினோ மக்கள் அரசியல் வாக்குவாதங்கள், பாகுபாடுகள் ஆகியவற்றைத் தவிர்த்து அமைதியான போட்டிகளை நடாத்த விரும்புகிறார்கள். தாம் பங்குபற்றுவதா இல்லையா என்பதை ஒவ்வொருவரும் தம் மனட்சாட்சிக்கேற்ப தீர்மானிக்கட்டும் என்றார்.




## குறும்(புப்)பா - 7

கொள்ளையிட்ட பணத்தில் பெருவீடு
கொண்டுசென்று வைத்தார்கள் கூடு
வெள்ளைவேன் கண்டஞ்சி விழுந்தடித்துச் சென்றதுபோல்
கள்ளமனம் பட்டதம்மா பாடு

~ மலர் ~




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் அன்று தொடக்கம் இன்றுவரை

- 1வது: 1896ல் ஏப்ரல் 6-15வரை கிரேக்க நாட்டின் தலைநகரான எதென்சில். 13 நாடுகள் 311 வீரர்கள்
- 2வது: 1900 மே 20-ஒக்டோபர் 28 பிரான்ஸ் - பரீஸில் - 1330 வீரர்கள்
- 3வது: 1904 ஜுலை 1 - நவம்பர் 23 வரை - அமெரிக்காவின் செயின்றலூயிஸ் நகரில்
- 4வது: 1908 ஏப்ரல் 27 - ஒக்டோபர் 31 வரை - லண்டனில் 22 நாடுகள் - 2034 வீரர்கள்
- 5வது: 1912 மே 06 - யூலை 22 வரை - சுவீடன் ஸ்டக்கோமில்
- 6வது: 1916 - பேர்லீனில் இடம்பெறவேண்டியது முதலாம் உலகப் போர் காரணமாக இடம்பெற வில்லை
- 7வது: 1920 - பெல்ஜியம் - அன்வெர்ப் - 29 நாடுகள் - 2607 வீரர்கள்
- 8வது: 1924 மே 4 - யூன் 27 வரை - பிரான்ஸ் - பரீஸ்
- 9வது: 1928 மே 17 - ஆகஸ்ட் 12 - நெதர்லாந்து அம்ஸ்டர்டாமில்
- 10வது: 1932 ஜுன் 30 - ஆகஸ்ட் 14 வரை ஐக்கிய அமெரிக்காவின் லொஸ்ஏன்ஜல்ஸ் நகரில்
- 11வது: 1936 ஆகஸ்ட் 1 - ஜேர்மனி - பேர்லின்
- 12வதும் 13வதும் (1940,1944) 2ம் உலகப் போர் காரணமாக நடைபெறவில்லை
- 14வது: 1948 ஜுலை 29 - ஐக்கிய இராச்சியம் லண்டனில்
- 15வது: 1952 ஜுலை 19 - ஆகஸ்ட் 3 வரை - நோர்வே - ஹெல்சிங்கி
- 16வது: 1956 - அவுஸ்ரேலியா மெல்போர்ன்
- 17வது: 1960.08.25 இத்தாலி - ரோமில்
- 18வது: 1964.10.10 ஜப்பான் டோக்கியோவில் (ஆசியா)
- 19வது: 1968.10.12 மெக்சிக்கோ
- 20வது: 1972.08.26 ஜேர்மனி - மியூனிச்
- 21வது: 1976.07.17 கனடா - மொன்றியல்
- 22வது: 1980.07.19 மொஸ்கோ (ரஷ்யா)
- 23வது: 1984 அமெரிக்கா லொஸ்ஏன்ஜல்ஸ்
- 24வது: 1988.09.27 தென்கொரியாவில் சியேஸ்
- 25வது: 1992 ஸ்பெயின் - பாசிலோனா
- 26வது: 1996 ஐக்கிய அமெரிக்கா - அட்லாண்டா
- 27வது: 2000 அவுஸ்ரேலியா - சிட்னி
- 28வது: 2004 எதென்ஸ் கிறேக்கத்தில்
- 29வது: 2008 சீனா பீஜிங்கில்

- வயலஜ் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்தி ஸ்தாபனங்கள்

உலகில் இடம்பெறும் உடனடிச் செய்திகள், புதினங்கள், தேவையான தரவுகள் இவற்றை எல்லாம் பத்திரிகைகள் எங்கிருந்து உடனுக்குடன் பெறுகிறது?

உலகில் இடம்பெறும் சகல புதினங் களையும் தொகுத்தெடுப்பதற்கென செய்தி ஸ்தாப னங்கள் பல நாடுகளிலும் உண்டு. சில அரசாங் கத்தால் நிர்வகிக்கப்படுகிறது, சில தனியாரால் நிர்வகிக்கப்படுகின்றது. இச்செய்திகள் இலத்திரனியல் ஊடகங்கள் வழியாகவும், அச்சு ஊடகங்கள் வழியா கவும் பரிமாற்றப்படுகின்றன. இவ்வாறு அகில உலக ரீதியில் இயங்கும் சில முக்கிய உலகச் செய்தி ஸ்தாபனங்கள் வருமாறு:




• அசோசியேற்றட் பிறெஸ் (Associated Press - AP) இது ஐக்கிய அமெரிக்காவில் உள்ள அதிபெரிய செய்தி நிறுவனமாகும். 1848ல் ஆரம்பிக்கப்பட்டு 1856ல் "Newyork Associated" என்னும் பெயரைப் பெற்றது.

• யுனைற்றட் பிறெஸ் இன்ரநஷனல் லிமிட்டட் (United Press International Ltd) (U.P.I) இது ஐக்கிய அமெரிக் காவில் உள்ளது. 221க்கும் மேற்பட்ட செய்திகளைச் சேகரிக்கும் ஸ்தாபனங்களை வேறு நாடுகளில் வைத் துள்ளது.

• றொய்ட்டர் (Reuters Ltd) இங்கிலாந்திலுள்ள மிகப் பிரபல்யமான செய்தி நிறுவகம். இது இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய தேசங்களுக்குச் செய்திகளை வழங்கும் முக்கிய நிறுவகமாகும்.

• ஏஜென்சி பிரான்ஸ் பிறெஸ்சி (Agence France Presse - A.F.P) இது பிரான்ஸ் தேசத்திலுள்ள பெரிய செய்தி நிறுவகம். "ஹாவ்ஸ்" என்ற பெயரில் 1835ல் உருவாக்கப்பட்டது.

• ராஸ் (Tass) (Telegrafnoye Agentstvo Soviets Kogo Soyuza) ரஷ்ய நாட்டுச் செய்தி நிறுவகம் 1918ல் ஆரம்பிக்கப்பட்டது.

• சமச்சார் (Samachur) இந்தியாவின் அரசாங்கச் செய்தி நிறுவகம்.

• பிறெஸ் ட்ரஸ்ட் ஒவ் இந்தியா (Press Trust of India) (P.T.I) இது இந்தியாவின் தனியார் செய்தி நிறுவகம்.

• கனேடியன் பிறெஸ் (Canadian Press - CP) இதன் தலைமையகம் ரொறொண்டோ நகரில் உள்ளது. இது கனடா தேசத்தின் செய்தி நிறுவகம்.

• கேபிள் நியூஸ் நெற்வேக் (Cable News Network) (CNN) இது அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள தனியார் செய்தி நிறுவகம்.

• இன்டர் பிறெஸ் சேவிஸ் (Inter Press Service) (I.P.S) இது ரோமாபுரியின் இத்தாலி தேசத்துச் செய்தி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அறப் நியூஸ் ஏஜென்சி (Arab News Agency) (A.N.A) இது மத்திய கிழக்கு நாடுகளுக்கு செய்தியை வினியோகிக்கும் நிறுவனம்.

• ஏஜென்சியா நாஷனல் ஸ்ரம்பா அசோசியேற்றா (Agenzia Nazionale Stampa Associata) (A.N.S.A) இது இத்தாலி தேசத்து செய்தி நிறுவகம்.

• சுவிஸ் கத்தோலிஸ்ஸி இன்ரநஷனல் பிறெஸ் ஏஜென்ரர் (Swiss Katholisch Internationale Press Agentur)

• ஸ்ரார் நியூஸ் ஏஜென்சி ஒப் பாகிஸ்தான் (Star News Agency of Pakistan) விசேட சமய சம்மந்தமான செய்தி வழங்கும் நிறுவகங்களும் உண்டு.

• யூவிஸ் ரெலிகிறபிக் ஏஜென்சி (Jewish Telegrapgic Agency)

• நியூகிலியற் நியூஸ் சேவிஸ் (Nucleat News Service)

• இலங்கா புவத் (Lanka Puvath) இது இலங்கை அரசாங்க செய்தி நிறுவனம்.

தொகுப்பு : வயலற் சந்திரசேகரம்

7ம் பக்கத் தொடர்ச்சி...

கால் கடுக்க நின்றார். பின் வரிசையில் நின்ற பையன்கள் முண்டியடித்து நெருக்கவும் கைத்தாங்கலாக அருகில் இருந்த மரத்தைப் பிடித்துக்கொண்டார்.

"இஞ்ச பாருங்க தம்பி மாரே எல்லாரும்தான் விரல்ல மை தடவுவாங்க. எதுக்கு நெருக்கிறீங்க?" கோபமாகவே கூறினார். "பெரியவரே உங்கட வயசுக்கு இது தேவையா? சும்மா வீட்டில இருக்கிறதுக்கு..." அவன் சொல்லி முடிக்கவில்லை.

"பொடிப்பயல் நீ என்னையா கேள்வி கேக்குறா? என்ட கெட்டித்தனத்துல நான் முன்னால இருக்கிறது உனக்குப் பொறாம. அலாரம் வைத்து எழும்பி வந்திருக்கன். என்ன அசைக்க முடியாது"

ஏதோ சொல்ல வாயெடுத்தவனை அலட்சியப்படுத்திவிட்டு உள்ளே செல்ல அனுமதி வரவும் கம்பீரமாகச் சென்றார்.


"எலக்சன் காட் தாங்கய்யா"

சேட் பொக்கட்டைத் தடவினார் இல்லை.

"அது வந்து தம்பி... நான் அவசரத்தில வந்ததால..." முடிக்கவில்லை கந்தசாமியண்ணன் "உங்கள யார் அவசரமா வரச் சொன்னது. காலங்காத்தால உயிர வாங்குதுகள்" காரமாக ஏசினார் பொறுப்பாளர். அதைவிடப் பெரிய கொடுமை மற்றொருவர் "ஐயா கள்ள வோர்ட் போடவா?" என்று கேட்டது. ஒரு வழியாக சமாளித்து அசடு வழிய மண்டபத்தை விட்டு வெளியே வரவும் 'கியூ'வில் நின்ற அதே பையன் "என்ன ஐயா மை தடவலயா? அலாரம் வைத்து எழும்பி வந்தீங்களே" நையாண்டித்தனம் அவன் பேச்சிலிருந்தது.

## கணிப்பொறி • கொலாசஸ்

இன்று கணிப்பொறி உலகமெல்லாம் பரவிவிட்டது. உலக இயக்கமே இன்று கணிப்பொறி ஊடாகவே நடந்துகொண்டிருக்கிறது. ஆராய்ச்சிகள், அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், மருத்துவம் எல்லாமே இன்று கணினி மயந்தான்.



ஆனால் இது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது தெரியுமா?

1943ல் இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற சமயத்தில் இங்கிலாந்தில் முதல் மின்னனு கணிப்பொறி கண்டுபிடிக்கப் பட்டது. அதன் பெயர் கொலாசஸ் (Colossus).

ஆனால் அதை வெளியில் தெரிவிக்காமல் பயங்கர இரகசியமாக வைத்திருந்தார்கள். ஏனெனில் அது எதிரிகளின் இரகசிய வார்த்தைகளை உடைக்கக் கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டம் தனது சமூகத் தொடர்புத் தினத்தை ஆகஸ்ட் மாதம் அனுஷ்டிப்பது வழக்கம். எமது பரிசுத்த பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் இவ் வாண்டுக்கான தனது தொடர்பு தினச் செய்தியில் 'ஊடகங்கள் உண்மை சொல்பவையாக இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

தகவல் தொடர்பை ஆங்கிலத்தில் 'கொம்யூனிகேசன்' என்று சொல்வார்கள். இச்சொல்லானது 'கொம்யுனிசு' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து உண்டானது. தொடர்பியல் என்பது ஒருவர் மற்றொருவருடன் தமது எண்ணங்களை, கருத்துகளை, உணர்ச்சிகளை, தகவல்களைப் பரிமாற்றும் செயலாகும். மனிதத் தொடர்பு என்பது பொருளுள்ள செய்தியை ஒருவர் இன்னொருவருக்கு அனுப்புவதாகும்.

தகவல் தொடர்பு ஊடகங்கள் தமக்கென சில நெறிமுறைகளை வரையறுத்துக்கொள்ள வேண்டும். பொறுப்புடமை, சுதந்திரம், தனித்துவம், பண்பாடு, துல்லியம், நடுநிலை, நேர்மை போன்ற நெறிமுறைகள் சாலவும் சிறப்பானவை. இன்றைய காலகட்டத்தில் இவையெல்லாம் தமது பண்பாகக் கொண்ட ஊடகமொன்றைக் காண்பது பெரும் சிரமமான காரியந்தான்!

தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி பிரமிக்கத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. மொழி தோன்றுமுன்பு உடலசைவின் மூலம், சைகைகள் மூலம் செய்திகள் பரிமாறப்பட்டன. 'சைகை' என்பது "கைகளால் சொல்ல கண்களால் கேட்டல்" என்று சீவக சிந்தாமணி சொல்கிறது.

"கையினால் சொலக் கண்களிற் கேட்டிடும் மொய்கொள் சிந்தையின் மூங்கை" (997) என்பது சிந்தாமணிப் பாடலாகும்.

மனித முகம் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டும் ஊடகமாகும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள் இதனைத் தான் வள்ளுவரும்

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" (குறள் 706) என்று சொல்லியுள்ளார். இதன்பின்னர் தான் ஒலிகள், மொழிகள் தோன்றின.

மொழி என்ற சொல்லும் அதன் பயன்பாடும் குறிப்பாக உச்சரிப்புகள் மிகவும் கவனமாகக் கையாளப்படவேண்டும். அது ஒலி வடிவில் இருந்தாலும் சரி, எழுத்து வடிவில் இருந்தாலும் சரி. அண்மையில் ஒரு விளம்பரப் பலகையைக் காண நேரிட்டது. 'இங்கு சாப்பாட்டிற்கான ஓடர்கள் ஏற்றுக் கொல்லப்படும்'

மிகவும் பயங்கரமான விளம்பரம். சாப்பாட்டிற்காக காசையும் கொடுக்கவேண்டும், உயிரையும் கொடுக்கவேண்டும். இரண்டு எழுத்துப் பிழைகள் கருத்தையே மாற்றிவிட்டன. மொழி தெரியாததால் வந்த வினையை இங்கு சொல்லியாக வேண்டும்.

ஒரு குருவானவர் வைத்தியசாலையில் நோயாளர் தரிசிப்பிற்காகச் சென்றிருந்தார். கட்டிலில் சீன நாட்டு நோயாளி ஒருவரைக் கண்டு அவருக்காகச் செபித்தார். நோயாளிக்கு மூக்கில் குழாய் மூலம் ஒட்சிசன் கொடுக்கப்பட்டுக்கொண்டு இருந்தது. குருவானவர் செபித்துக்கொண்டிருக்கும் போது சீனக்காரர் சீன மொழியில் ஏதோ சத்தமாகச் சொன்னார். குருவானவருக்குச் சீன மொழி விளங்கவில்லை. எனினும் அவன் சொன்னதை ஆங்கிலத்தில் குறிப்பெடுத்துக்கொண்டார். சிறு நேரத்தில் நோயாளி இறந்துவிட்டான். பக்கத்தில் இருந்தமை தொடர்பாகக் குருவிற்குத் திருப்தி. வெளியே வந்த பிறகு சீன மொழி தெரிந்த ஒருவரிடம் அக்குறிப்பை வாசிக்கக் கொடுத்தார். அவர் அதை வாசித்தார்.

"மடையா, என் சுவாசக் காற்றுக்குழாயை மிதித்துக்கொண்டிருக்கிறாய். கெதியில் காலை எடு. இல்லாவிட்டால் நான் செத்துவிடுவேன்"

இங்கு தொடர்பாடல் பிழைத்துவிட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## பிறையாசனம்



(அர்த்த சக்கராசனம்)

1. விரிப்பின்மீது கால் பாதங்களை ஒன்று சேர்த்து வைத்து நிற்கவும்.
2. கைகளால் இடுப்பைப் பிடித்து முதுகை அமுத்தி பின்னோக்கி முடிந்தளவு வளைக்க வேண்டும்.
3. கால் முட்டிகளை வளைக்கக் கூடாது.
4. ஆசன நிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
5. கண்கள் திறந்திருக்கவேண்டும்.
6. இந்நிலையில் 10 முதல் 15 வினாடிகள் வரை நின்று பழகலாம்.
7. மூச்சை வெளிவிட்டு இயல்பு நிலைக்கு வரவும்.
8. மூன்று முறை செய்யலாம்.
9. பின் இயல்பு நிலைக்கு வந்து ஓய்வெடுக்கவும்

### இதனால் ஏற்படும் பலன்கள்

1. அழிந்த திசுக்கள் புதுப்பிக்கப்படுவதால் இளமை மேம்பட்டு முகப்பொலிவு ஏற்படுகிறது.
2. சோம்பல் ஒழிந்து சுறுசுறுப்பு உண்டாகும்.
3. குரல் இனிமை பெறும் கண்பார்வை தெளிவடையும்.
4. வயதானாலும் முதுகெலும்பை இளமையுடன் வைத்துக் கொள்ளலாம்.
5. முதுகெலும்பிலுள்ள நரம்புகளுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கின்றது.

### தீரும் நோய்கள்

1. வயிறு, இடுப்பு முதலிய பகுதிகளில் உள்ள கொழுப்பைக் கரைக்கின்றது.
2. கூன் விழுந்த முதுகை நிமிர்த்துகின்றது.
3. சளி, இருமல், சுவாசக் கோளாறுகள் அனைத்தும் சுகம் பெறும்.
4. தொடர்ந்து செய்து வந்தால் ஆஸ்த்துமா, நீரிழிவு, இதய பலவீனம், கிட்னி கோளாறுகள் ஆகியவை கட்டுப்படும்.
5. தொப்பை குறையும், முதுகு வலி மறையும்.

### மாற்றாசனங்கள்

1. பாதஹஸ்தாசனம்
2. சசாங்காசனம்

### குறிப்புகள்

1. சுகமான ஆசனம் ஆதலால் யாரும் பழகலாம்.
2. ஆரம்பத்தில் கூடுதலாக வளையாமல் படிப்படியாக வளையவும்
3. ஆசன நிலையில் மூச்சை அடக்கக் கூடாது மற்றும் இருதயக் கோளாறு இரத்த அழுத்தம் உள்ளவர்கள் பொறுமையாகச் செய்யவும்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar
(India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்ற இலங்கை முஸ்லிம்கள் கேரளாவிற்கு வந்து தமிழ்ப் பெண்களை மணந்து (கேரளா, சேரநாடு, தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு) அத்தகைய கலாசாரத்தைப் பெரும்பாலும் தம்முடைய வாழ்க்கையில் பின்பற்று கின்றார்கள். ஆபரணங்கள் அணிவதில் முஸ்லிம் பெண்களுக்கு விருப்பம் அதிகம். இஸ்லாம் மக்களின் முக்கிய வணக்கஸ்தலங்களான மசூதிகள் கலை அமிசம் பொருந்தியவைகள்.

இவ்வாறே இலங்கைவாழ் சிங்கள, தமிழ், கிறிஸ்தவர்கள் தத்தம் வாழ்வில் பல்வேறு துறை களிலும் கலைக்கு முதன்மை இடம் அளிக்கின்றனர். கிறிஸ்தவ தேவாலயங்கள் கலைக்கு முன்னுரிமை வழங்குகின்றன.



இலங்கைவாழ் பறங்கியர், போர்த்துக் கீசர், ஒல்லாந்தரைப் பின் பற்றுபவர்கள். போர்த் துக்கீச ஒல்லாந்த நடனங் களைப் பேணிப் பாது காக்கின்றனர்.

இலங்கையில் நடனக் கலையில் சிங்கள நடன நாடகக் கலைகள் மிகத் தொன்மையானவைகளும் சிறப்பான வைகளுமாகும். பேராசிரியர் சரத்சந்ர நிறைய ஆய்வுகளைச் செய்திருக்கிறார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் மறைந்து கிடந்த வடமோடி தென்மோடி நாட்டுக் கூத்திற்கு முதன்மையளித்து பல நாட்டுக் கூத்துகளை மேடை யேற்றியுள்ளார். அன்னாரின் சிறப்புமிக்க மாணவனே இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரா சிரியர் சி. மௌனகுரு அவர்கள். பேராசியர் மௌன குரு அவர்கள் நுண்கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து 'சடங்குகளிலிருந்து நாடகம்' போன்ற பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

பேராசியர் சு. வித்தியானந்தன் அவர்கள் சங்ககால நூல்களை ஆய்வு செய்து தமிழர் சால்பு என எழுதியுள்ள நூலில் 14ம் இயல் (பக்கங்கள் 253 - 300 வெளியீடு தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி) தமிழகக் கல்வியும் கலைகளும் பற்றிக் குறிப்பிடும் பொழுது கல்வி, வானநூல், நாட்டுக் கூத்து, சமயச் சடங்குகளுக்குரிய ஆடல், பேயாடல், போர்க்கள ஆடல் என விரிவாகக் குறிப்பிடுகின் றார்கள்.

இசை பற்றிக் குறிப்பிடும்பொழுது இசைக் கருவிகளான யாழ், பறை, பறையின் ஏனைய இசைக் கருவிகளான முரசம், பதலை, தொண்டகம், ஆகுளி, தட்டை, எல்லரி, தடாரி, குழல், வயிர், பாண்டில், சங்கு போன்ற நுண்கலைகள் பற்றியும் தென்னிந் தியக் கலைகள் என்ற அதிகாரத்தில் சற்று விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இலங்கையில் பரதக் கலையை ஊக்கு விக்கும் முகமாக வட இலங்கையில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, கிழக்கிலங்கையில் விபுலா னந்தர் இசை நடனக் கல்லூரி தற்காலத்தில் முக்கியம் பெறுகின்றன. மேற்கூறியவற்றிலிருந்து மக்களின் வாழ்வோடு கலை இரண்றக் கலந்துள்ளது என அறியலாம்.

இலங்கை நாகரீகக் கலாசாரத்தில் பொலநறுவைக் காலம் முக்கியமானது. இக்காலத்தில் இலங்கைக் கலாசாரம் தமிழகக்



# நடனக் கலை

## இலங்கை இஸ்லாமியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கலாசாரத்துடன் கூடிய வளர்ச்சியடைந்தது. அக்காலத்தில் தென்னிந்தியக் கலைகளும் அதற்கு அடுத்தபடியாக சிங்களக் கலைகளும் ஒன்றை ஒன்று தனித்தும் மிஞ்சியும் இருந்தன.

தென்னிந்தியப் பெருமன்னன் சுந்தரச்சோழ சக்கர வர்த்தியின் (வரலாற்றில் பேராந்த பரகாந்தன் 956-973) 2வது மகன் அருள்மொழி வர்மன் ராஜராஜசோழன் (கி.பி. 985-1016) என்ற பெயரோடு சோழ சாம்ராஜ்ஜியத்தில் மகுடம் சூட்டி இலங்கை (சிங்கை, கடாரம்) போன்ற பல நாடுகளையும் கைப்பற்றி ஆண்டான். இலங்கை வறலாற்றுக் குறிப்புகளின் படி மிக முக்கியம் வாய்ந்த பௌத்த ஆலயங்களைச் சோழர்கள் அழித்தார்கள் எனக் கூறப்படுகின்றது. அதற்குப் பதிலாகத் தென்னிந்தியக் கலை அமிசங்களும் கற் கோயில்களும் தெய்வ திருச் சிலைகளும் ஆடல்களும், பாடல்களும் இலங்கை மக்கள் வாழ்வோடு இணைந்தன.

பின் இணைப்பில் சோழர் காலக் கலை அம்சங்களின் படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதை ராஜராஜசோழன் இலங்கையில் கட்டிட நிர்மாணங்களைக் கலை அமிசத்தோடு செய்தான் என்பதையும் தென்னிந்தியத் தஞ்சைப் பெருங் கோயில், அங்குள்ள நூற்றுக்கணக்கான லிங்கங்கள், மாபெரும் நந்தி என்பன மக்கள் கலை வாழ்வில் எவ்வளவு ஈடுபட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

சோழர்களிடம் இருந்து இலங்கையைக் கைப்பற்றிய விஜயபாகுவும் அவனைத் தொடர்ந்து வந்த அரசர்களும் இலங்கை வரலாற்றில் மகா பராக்கிரமபாகு எனப் பெயர் பெற்ற மாமன்னரும் பொலனறுவை ராஜ்ஜியத்தை மேலும் கலை அம்சங் களுடன் கூடிய உன்னத நகரமாக்கினர். இதற்குப் பின்னர் இலங்கையை 12ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த நிசங்க மன்னன் பொலனறுவையிலும், ஏனைய இடங்களிலும், அழகுமிகு கட்டிடங்களையும், சிலசாசனங் களையும் கலை அம்சங்களோடு அமைத்தான் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பலவுள.

மேலும் விஜயபாகு மன்னன் இந்தியாவில் புத்தகாயாவிலுள்ள மகாபோதி என்னும் இடத்தற்கு ஏராளமான விலையுயர்ந்த கலைப் பொக்கி ஷங்களை அனுப்பியதாக சூல வம்சம் குறிப்பிடுகின்றது. (ஞாலவங்சம் 55ம் பக்கம் 23ம் வசனம்) மேலும் சிங்களக் கலை அமிசங்களை பொலனறுவைக்கு அண்மையிலுள்ள திம்புலா கலையிலும், பொலனறுவை கல்விகாரையிலும் நாம் காணலாம்.

இலங்கைப் பௌத்த வரலாற்றில் புத்தரின் தந்ததாது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதனோடு தொடர்புடைய சுற்றுப் பிரகாரங்களே, பெரஹர என வர்ணிக்கப்படுவதை ஏற்கனவே குறித்துள்ளோம்.

புத்தரின் தந்ததாதுவும், பிச்சாபாத்திரமும் யார் வசம் இருக்கின் றனவோ அவனே இலங்கை ராஜ்ஜியத்தின் தலைவனாக இருக்க முடியும் என்பது ஐதீகம். தந்த தாது முக்கியம் பெறுவதுடன் அதனோடு தொடர்பான கண்டிய நடனமும் காலவெள்ளத்தில் முக்கியத்துவம் அடைந்தது.

கண்டிய நடனம் மிகவும் பிரசித்தி பெற்றது. இலங்கையில் எந்த முக்கிய வைபவத்தின் போதும் கண்டிய நடனம் ஆடப்படுகின்றது. இந்த விழாக்களில் கண்டிய நடனம் மிக முக்கியத்துவம் பெற்றமை தென்னிந்தியாவைச் சேர்ந்த கண்ணுச் சாமிக்கு உரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுச்சாமி இலங்கை வரலாற்றில் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் எனப் பெயர் பெறுகிறான். ஆட்சிக்கு அதிக உரிமை இல்லாத இவன் சிங்கள பௌத்தர்களைத் திருப்திப்படுத்தும் முகமாக கலை அமிசமிக்க கண்டிப் பெரஹறாவிற்கு முக்கியத்துவம் அளித்தான்.

இலங்கை வரலாற்றில் மிக முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு திருத்தலம் சிவனொளிபாத மலையாகும். இலங்கையில் பல மதத்தவரும் இதைத் தமதாக்கிக் கொண்டனர். சிவபெருமானின் பாதம் அங்கு இருப்பதாகவும், விவிலியம் குறிப்பிடுகின்ற முதல் மனிதன் ஆதாமின் பாதம் இருப்பதாகக் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் நம்புகின்றனர்.

இலங்கை மன்னர்கள் இந்தத் திருத்தலத்திற்கு இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட ஏராளமான ஆபரணங்களை அன்பளிப்புச் செய்தார்கள். இவை யாவும் கலை அமிசம் பொருந்தியவை. நிஸங்க மன்னன் சிவனொளிபாத மலைக்கு மிகுந்த பக்தி செலுத்தினான். இதைப் பற்றி ஏராளமான சாசனங்கள் இலங்கையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள (N.C.P) பொலனறுவையில் காணப்படுகின்றன.

இதனோடு சைவ, வைஷ்ணவ, இந்து புராண வழிபாட்டு முறைமைகளோடு கூடிய ஏராளமான கலைப் பொருட்கள் இலங்கையில் கிடைக்கின்றன. சிவலிங்கங்கள், வெண்கலத்தினாலான சிவபெருமான் உருவச் சிலை, கார்த்திகேயன், பார்வதி, லக்ஷ்மி ஆகியோரின் வெண்கலச் சிலைகளும் கலை அம்சத்தோடு நூதன சாலையில் இடம் பிடித்துள்ளன.

இதையடுத்து நாம் இலக்கியக் கலையை உற்று நோக்கும்போது இலங்கைவாழ் எல்லா இனத்தவர்களும் நடனம், நாட்டியம், இசை, இலக்கியம் போன்ற கலைகளை வளர்க்க பெரும் முயற்சி செய்துள்ளனர்.


- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -

# கடுகுக் கதை 7 கடிதப் பிரச்சினை

பிரான்சிஸ் தான் கேள்விப்பட்ட விடயங்களால் அதிர்ந்துபோய்விட்டான். அந்தப் பாடசாலையில் கணித ஆசிரியர்கள் இல்லாமையால் தானே வலிந்து போய் 6 மாதங்கள் தொண்டராசிரியராகப் பணியாற்றினான். தொண்டராசிரியர்கள் எவரையும் பாடசாலைகளில் வைக்கக்கூடாது என்ற கடிதம் அதிகாரிகளால் பாடசாலை அதிபருக்கு அனுப்பப்பட்டிருந்தமையால், பிரான்சிஸ் பாடசாலைக்குப் போவதை நிறுத்தி விட்டான்.

அதிபர், தனது சகாக்களிடம் அந்தக் 'கடிதப் பிரச்சினையால்தான்' பிரான்சிஸை நிற்பாட்ட வேண்டியிருந்தது என்றும், கடைசியில் கணிதம் கற்பிக்க எவருமில்லை என்றும் வேதனைப்பட்டிருக்கின்றார். இதில் ஒருவருக்கு 'கடிதப் பிரச்சினை' என்ற விடயம்தான் காதில் விழுந்திருக்கின்றது. கல்வியதிகாரிகளின் கடிதம் என்ற விடயம் அவருக்குத் தெரியாது.

'கடிதப் பிரச்சினை' அப்படியே திரிபடைந்து மீண்டும் பிரான்சிஸிற்கே வந்து சேர்ந்தது. 'பிரான்சிஸ்



படிக்கிற ஒரு புள்ளய்க்கு கடிதம் கொடுத்ததாம்; அதனால பள்ளயில இருந்து நிப்பாட்டிப் போட்டாங்களாம்' அவன் அதிர்வான்தானே!

தெளிவற்ற தொடர்பாடல்.

- பஸ்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கடந்த இதழ் தொடர்ச்சி...

**தங்களது முதற்கதை அதுவும் மாணவப் பராயத்தில் பத்திரிகையில் வெளிவந்த ஆரம்ப காலகட்டத்தை விபரித் தீர்கள். அதேபோன்று தங்களின் முதலாவது நாவலான 'இதயங்கள் அழுகின்றன' பிறந் ததிற்கும் காரணம் இருப்பின் கூறமுடியுமா?**

நிச்சயமாக.. அது ஒரு சுவையான அனுபவம். காலத்திற்குக் காலம் எமது கல்விக் கொள்கைகள் மாறுபாடடைவதை அனைவரும் அறிவோம். அதேபோல 1975ம் ஆண்டில் ஆரம்பக் கல்வியில் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது அதுவரை ஆரம்பக் கல்வித் திட்டத்தில் தமிழ் மொழி, கணிதம், பூமி சாஸ்திரம், சரித்திரம், சித்திரம், கைப்பணி என்று இவ்வாறு தனித் தனியாகப் பாடங்கள் கற்பிக்கப்பட்டிருந்தன. இவை யனைத்தையும் சேர்த்து 'ஒன்றிணைந்த பாடத் திட்டம்' என்ற பெயரில் 1975ல் புதிய பாடத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது பற்றிய பயிற்சி ஒன்றினை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு அளிக்க விரும்பிய கல்வி அமைச்சு ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலிருந்தும் ஒரு அனுபவ அதிபரை அழைத்து புதிய முறைப் பயிற்சியை அளிக்க விரும்பியது. இதன்படி கிண்ணியா வட்டாரத் திலிருந்து ஒருவரைத் தெரிவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதால் கிண்ணியா வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த ஜனாப் ஏ.ஆர்.இஷாக் என்பவர் தனது கல்விப் பிரிவில் மேற்படி புதிய பயிற்சிக்கு என்னைத் தெரிவு செய்தார். அப்போது நான் அவரது கல்விப் பிரிவுக்குட்பட்டிருந்த தம்பலகாமம் சாரதா வித்தியாலயத்தில் அதிபராக இருந்தேன்.

நான் ஏற்கனவே 1961-62 காலப்பகுதியில் ஆசிரியப் பயிற்சியை முடித்தவன். பின்னர் போட்டிப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிபர் சேவையில் இந்த வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டிருந்தேன். புதிய கல்வித் திட்டத்தின்படி ஒன்றிணைந்த பாடத்திட்டத்தை மேற்கொள்ள மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைக்கு அழைக்கப்பட்டேன். 1975ல் இப்பயிற்சி நெறி ஆரம்பமாகியது.

நான் ஒரு குடும்பஸ்தன். ஏறக்குறைய நாள்முழுவதும் ஏதோ ஒரு வகையில் வேலைகள் என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கும். அப்படிப்பட்ட எனக்கு இந்தப் பயிற்சிக் காலத்தில் மாலைப் பொழுது வெறுமையாகவே காணப்பட்டது.

பயிற்சியில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்களாக பகல் வகுப்பு முடிந்த பின் மாலை வேளைகளை சினிமாவுக்குச் செல்வதிலும் உல்லாசப்பானங்கள் அருந்துவதிலும் கழிக்கப் பழகியிருந்தார்கள். இவையனைத்திற்குமே எந்த விதத்திலும் பழக்கப்படாத எனக்கு மாலைப் பொழுதைக் கழிப்பது பெரும் சிரமமாக இருந்தது.

இப்படியான ஒரு தர்மசங்கடமான நிலையில் ஒருநாள் எங்கள் படுக்கை அறையை ஒட்டியிருந்த இடத்தில் வெளிச்சம் தெரிவதைக் கண்டு அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றேன். அப்போது மணி இரவு பத்து.

எங்களது கலாசாலை விரிவுரையாளர் கோ.கோணசப்பிள்ளை அவர்கள் ஆழமான சிந்தனை வயப்பட்டு எழுதிக்கொண்டிருந்தார். அசைவாட்டத்தைக் கண்டு நிமிர்ந்து பார்த்து அன்பாய் விசாரித்தார். அவரிடம் எனது தர்மசங்கட நிலையைக் கூறினேன். உடனே தனது மேசை லாச்சியைத் திறந்து சிறது தாள்களை எடுத்து என்னிடம் நீட்டி "நீரெல்லாம் கற்பனை வளம் மிக்கவர். எழுதக்கூடியவர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏதாவது எழுதும்" என்று சொன்னார்.

பொறி தட்டியது போலிருந்தது. அவர் தந்த தாள்களை வைத்துக்கொண்டு அடுத்தநாள் மாலையே சிறுகதை ஒன்றை எழுதத் தொடங்கினேன். அது சற்றுப் பெரிதாக அமைந்துவிட்டது. இன்னும் சில விடயங்களைச் சொல்ல விரும்பினேன். அது குறுநாவலாக விரிந்தது. மீண்டும் அதனைப் பிரதி பண்ணிக்கொண்டிருக்கும்போது அந்த விஷேடப் பயிற்சியில் என்னோடிருந்த கவிஞர் 'ஜீவா ஜீவரத்தினம்' அதனைப் படித்துவிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததோடு அதனை வீரகேசரி வெளியீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி ஆலோசனை கூறினார். அக்காலகட்டத்தில் (1975) மாதமொரு முறை நாவல்களைப் புத்தகமாக வெளியிட்டுக் கொண்டிருந்தன.

அவரின் ஆலோசனைக்கிணங்க எழுதியதை வீரகேசரிக்கு அனுப்பிவைத்தேன். அந்த வார முடிவில் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு வந்தபோது பதில் கடிதம் ஒன்று கிடைத்தது. அதில் "நாவல் கிடைத்தது. பரிசீலனைக்குப் பின் முடிவு தெரிவிக்கப்படும்" என்று காணப்பட்டது. மனம் மகிழ்ச்சியடைந்தது.

இரண்டு வாரங்களின் பின் பார்சல் ஒன்று கிடைத்தது. அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன். நான் அனுப்பி வைத்த அதே நாவல். பெரும் ஏமாற்றமாக இருந்தது. அதனோடு கூட கடிதம் ஒன்று. "நீங்களெல்லாம் எழுத்துத் துறைக்கு வரத்தான் வேண்டுமா?" என்ற வாசகங்களோடு அக்கடிதம் இருக்கும் என்ற எண்ணத்தில் பிரித்துப் படித்தேன். நாவல் வாசிக்கப்பட்டுள்ளது. பின்வரும் குறிப்புகளை அவதானிக்கவும்

1. கதையின் கரு மிக நன்று. 2. கதையில் மூலக்கதைக்குப் பொருத்தமில்லாத அம்சங்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. 3. சில விடயங்கள் அவசர அவசரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 4. எங்கள் பிரசுரத்திற்கு 120 பக்கங்கள் வரக்கூடியதாக மேற்குறிப்பிட்ட குறிப்புகளை மனதிற் கொண்டு மீண்டும் நாவலை எழுதி அனுப்புவீர்களாயின் பிரசுரிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

மீண்டும் எனது நாவலைப் பிரித்துப் படித்தேன். பல இடங்களில் சிவப்பு மையினால் அடிக் குறிப்புகள். என் மனதில் போராட்டம். என்னால் செய்யக்கூடியளவு ஏதோ பிரதான கருவைச் சொல்லி விட்டேன். இதற்குமேல் எப்படி விரிவாக்குவது? என்னால் முடியாது என்று முடிவெடுத்தேன்.

அதேவேளை, எத்தனையோ வேலைப் பழுக்களுக்கு மத்தியில் எனது நாவலைப் பக்கம் பக்கமாகப் பொறுமையுடன் வாசித்து அதில் தேவையான குறிப்புகளைக் குறிப்பிட்ட எனக்கு எந்த விதத்திலும் முன் அறிமுகம் இல்லாத வீரகேசரி நாவல் வெளியீட்டாளரான திரு.சி.பாலச்சந்திரன் அவர்களின் நல்ல நெஞ்சத்தை நினைத்தபோது என்னுள் ஒரு வேகம் கிளர்ந்தெழுந்தது.

அன்று இரவே மீண்டும் மட்டக்களப்பிற்குப் புறப்பட்ட ரயில் பிரயாணத்திலேயே நாவலை எவ்வாறு விரிவாக்குவது என்பது பற்றிச் சிந்தித்துக்கொண்டே சென்றேன். மறுநாள் மாலை கலாசாலையில் எழுதத் தொடங்கி இரண்டு நாட்களில் எழுதி முடித்து அனுப்பி வைத்தேன். "இதயங்கள் அழுகின்றன" என்ற தலைப்பில் அது வீரகேசரியின் 61வது பிரசுரமாக 1977ல் வெளிவந்து பலரின் பாராட்டைப் பெற்றது.

**இதன் பிறகு தங்களின் இலக்கியப் பங்களிப்புப் பற்றிச் சிறிது கூறுங்கள்.**

அப்போது என்னைச் சுற்றிக் காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பணிகள் என்னைப் பெரிய அளவில் எழுத முடியாமல் பண்ணிவிட்டது. வேலைப் பழுக்களுக்கு மத்தியில் மனதில் கொந்தளிக்கும் எண்ணங்களை எழுத்து வடிவமாக்கவும் முயற்சித்திருக்கிறேன். அக்காலகட்டத்தில் திருமலையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த சஞ்சிகைகளுக்கு என்னாலான பங்களிப்பைச் செய்துள்ளேன். எடுத்துக்காட்டாக திருமலையிலிருந்து வெளிவந்த மைக்கல் கொலினின் 'தாகம்' கே.ரத்னாவின் 'உதயம்' முன்னோடிகளின் 'புதுமை நெஞ்சம்' நோமன் பல்தசாரின் 'கமலை' சசி-தில்லையின் 'கோணைத் தென்றல்' போன்ற பத்திரிகைகளின் ஆரம்ப இதழ்களுக்கு ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் செய்ததோடு வடிவமைப்பிலும் அதற்கான ஓவியங்களை வரைந்தும் உதவியுள்ளேன். இதனோடு கல்வி சம்மந்தப்பட்ட வழிகாட்டிகள் பாடசாலை போட்டி நிகழ்வுகளின் அட்டைகள் போன்றவை என் கைவண்ணத்திலேயே வெளிவந்துள்ளன. இன்று எல்லாமே கணினி மயப்பட்டுவிட்டன.

**கவிதைத் துறையில் தங்களின் பங்களிப்பு ஏதேனும் உண்டா?**

அவ்வப்போது பீறிட்டெழும் எண்ணங்களை கவிதை வடிவமாக்கிய வாய்ப்புகளும் நிறையக் கிடைத்துள்ளன. 'சு.பிதா' என்ற பெயரில் ஏராளமான கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. நீரில் பூத்த மலர் என்ற கவிதைத் தொகுதியிலும் எனது கவிதை இடம்பெற்றுள்ளது.

கவிதைத் துறையில் குறிப்பாக ஒரு சம்பவத்தைச் சொல்லவேண்டும் என்று நினைக்கின்றேன். உலகம் முழுவதிலுமுள்ள கவிஞர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான 'செம்மாங்கனி' என்ற நூலின் அறிமுகவிழா 1982ல் திருமலை பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய பண்டிதர் இ.வடிவேலு ஐயா ஆரம்பத்தில் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அதனை அணைத்தார். அங்கு பார்வையாளராகக் கலந்துகொண்டிருந்த கலைஞர்களிடம் தான் விளக்கை அணைத்ததற்கான காரணத்தை கவிதை வடிவில் தரும்படி வேண்டுகோள் விடுத்தார்.

பங்குகொண்டிருந்த கவிஞர்களில் பெரும்பாலானோர் பதில் கவிதைகளை எழுதிக் கொடுத்தனர். நானும் எழுதினேன்.

உலகக் கவிதைத் தொகுப்பின் தொகுப்பாளரான 'அழகாபுரி அழகுதாசன்' (மறைந்த பிரபல கவிஞர் கண்ணதாசனின் உறவினர்) எழுதப்பட்ட திடீர்க் கவிதைகளைப் பரிசீலனை செய்து பின்வரும் கவிதை சிறப்பாக உள்ளது என்று தெரிவித்ததோடு "தமிழகக் கவிஞர்களுக்கு ஈழத்துக் கவிஞர்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல" என்று குறிப்பிட்டார்.

அகத்தின் பொலிவுக்கு திரியில் ஒளிச்சுடர்
முகத்தில் நெளிவுக்கு திரியில் புகைச்சுடர்
நோக்கிய தலைவர் திரியைத் தீண்டினார்
நோக்கம் மங்கலப் பொலிவு காத்தார்

இவ்வாறு பாராட்டப்பட்ட கவிதை எனது ஆக்கமே. மிலேனியம் ஆண்டு என்று சொல்லப்பட்ட புத்தாயிரம் ஆண்டு ஆரம்பித்த வேளை அதாவது 31.12.1999 நள்ளிரவு திருமலை புனித மரியாள் பேராலயத்தில் புத்தாண்டு ஆராதனையின் பின்னர் நள்ளிரவு ஒரு மணிக்கு ஆயர் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட 'கவிதாலயம்' என்னும் கவிதைத் தொகுதியிலும் எனது கவிதை இடம்பெற்றுள்ளது. ஈழத்து இலக்கியச் சோல நிறுவனத்தின் 11வது வெளியீடான இத்தொகுப்பில் 50 கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

- தொடரும் -

- ஆரியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

அலகு – 3

## இன்றைய தமிழர் சமூகமும் கிறிஸ்தவத்தின் எதிர்பார்ப்பும்.

ம. குமுதா (சிறப்புக் கலைமாணி)



### 1. சமூகமும் சமூகச் சீர்கேடுகளும்.

சமூகம் என்பது ஒரு கூட்டு வாழ்க்கை. இவ் வாழ்க்கை மனித இனத்தைப் பண்படுத்துகின்றது. இந்த அமைப்பில்தான் பல்வேறு நெறிமுறைகளும் பண்பாட்டுக் கூறுகளும், பண்பாட்டு அடையாளங்களும் பொதிந்து கிடக்கும். இத்தகைய அடையாளங்கள் சமூகத்தின் அங்கமாகிய தனிமனித வாழ்வை நெறிப்படுத்திக் காட்டுவனவாக அமைந்துவிடுகின்றன. இவ்வாறான சமூகத்தின் தனிப்பட்ட பண்புகள், நடத்தைகள், சட்டங்கள், ஒழுங்குகள் என்பன பிளவுபட்டுச் சீரழிந்து செல்லும்போதே சமூகச் சீர்கேடுகளும், வன்முறைக் கலாசாரமும் உருவாகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகப் பாலியல் வல்லுறவுகள், போதைவஸ்துப் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், கோஷ்டி மோதல்கள், காட்டிக்கொடுத்தல், பொதுநலனில் அக்கறையின்மை, அயலவரின் வீழ்ச்சியில் மகிழ்ச்சி, குடும்ப நலனில் அக்கறையின்மை, பெரியோர் முதியோர் மதிக்கப்படாமை, சாதிப் பிரிவினை, சீதனக் கொடுமைகள், மூடநம்பிக்கைகள் என நீண்டு செல்லும் பட்டியலைக் கூறமுடியும். இவ்வாறான சமூகச்சீர்கேடுகளை சிறு சிறு தலைப்புகளின் கீழ் விரிவாக நோக்கின் இன்றைய எம் சமுதாயம் எவ்வளவுக்கு சீரழிந்து அழிவுப்பாதையில் போய்க் கொண்டிருக்கின்றது என உணர முடியும்.

### 2. தனிநபர் சீர்கேடுகள்.

செல்வந்தர், பணம்படைத்தவர் மத்தியில் காணப்படும் சுயநலப்போக்கு வறியவரைச் சுரண்டுவதாகவும் கருப்புப்பணம், கள்ளச்சந்தை, பதுக்கல்கள் என்பன வறிய மக்களின் வயிற்றில் அடிப்பதாகவும் காணப்படுகின்றது. கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்டுள்ள பாரிய பிரச்சனை புரிந்துணர்வு இன்மை ஆகும். இதனால் விவாகரத்துகளும், கொலை, தற்கொலைகளும் பெருமளவில் தலைவிரித்தாடுகின்றன. மேலும் நம்பிக்கைத் துரோகம் எனும் தனி நபர் சீர்கேடும் எம் சமூகதில் காணப்படுகின்ற ஒரு விடயமாகும். பெண்களும் அதேபோல் ஆண்களும் குடும்பவாழ்வை ஆரம்பிக்கும் போது பல ஏமாற்றங்களுக்கும் விரக்திகளுக்கும் உள்ளாகின்றனர். வறுமை காரணமாக மேலை நாட்டுக்கு உழைப்பதற்காகச் செல்லவென வெளிநாட்டு முகவர்களிடம் பணம் கொடுத்து ஏமாறும் அதேவேளை வெளிநாடுசென்று அங்கு பல பலாத்காரங்களுக்கு உள்ளாகும் நிகழ்வுகளும் கூட காணப்படுகின்றன. நண்பர் எனும் பேரில் நம்பிக்கைத் துரோகம் செய்யும் நபர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

பழிவாங்கும் குணத்தை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்படும் சினிமாக்களையும், சின்னத்திரை நாடகங்களையும் விரும்பிப் பார்க்கும் சிறுவர் முதல் முதியவர் வரையான சமுதாய நபர்களால் பாடசாலை, பல்கலை, குடும்பம் என்பவற்றில் பழிவாங்கும் இயல்பு வளர்ந்து வருகின்றது. பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துவிட்ட நிலையிலும் மூடநம்பிக்கையிலிருந்து இன்னும் மக்கள் மீளவில்லை எனலாம். குறிப்பாக இந்தியாவில் குழந்தைகளை நரபலியிடுவது, உயிருடன் மண்ணுக்குள் புதைத்து வெளியே எடுப்பது போன்ற பல மூடச் செயற்பாடுகள் இன்றும் தமிழர் மத்தியில் காணப்படுகின்றன. பிறரது பொருளைக் கவர்ந்துகொள்ளும் திருட்டுத்தனமும் அவற்றை நியாயப்படுத்தி வாதிடும் தன்மையும்கூட வருந்தத்தக்க தனிநபர் சீர்கேடுகளாகும்.

– தொடரும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தலத் திருச்சபையும், குடும்ப, சமூக ஒற்றுமையும்

ஆதிகாலத் திருச்சபையானது மற்றைய எல்லா வகையினருக்கும் ஒரு முன்மாதிரிகையாய் விளங்கியது. அவர்கள் அப்போஸ்தலர்களின் படிப்பினையைக் கேட்பதிலும், அப்பம் பிட்டலிலும், நட்புடன் உறவாடுவதிலும், இறை வேண்டலிலும் நிலைத்திருந்தார்கள் (தி.ப 2:42) இத்தகைய வாழ்க்கை முறையானது எல்லோரையும் கவரக் கூடியதாய் இருந்தது.

அத்திருச்சபையானது பேதுருவின் தலைமையில் நிறுவப்பட்டு வழிநடத்தப்பட்டுக் கொண்டே வந்தது. இத்திருச்சபையினைப் பவுல் கிறீஸ்துவின் திருவுடலுக்கு ஒப்பிடுகிறார். இங்கு கிறீஸ்து தலையாகவும் நாம் உடலின் உறுப்புக ளாகவும் இருக்கிறோம். ஒரே உடலில் நமக்கு உறுப்புகள் பல உள்ளன. அவ்வுறுப்புகள் எல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை (உரோ 12: 3-4). அதுபோலவே நாமும் பலராயினும் கிறீஸ்துவுடன் இணைந்துள்ளதால் ஒரே உடலாய் இருக்கிறோம். நமக்கு அளிக்கப்பட்ட அருளுக்கேற்ப வெவ்வேறு கொடைகளைப் பெறுகின்றோம். எனவே அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

மற்றும் இத்திருச்சபையில் குடும்பங்கள் பற்றிப் பவுல் கூறுகையில் கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருக்கவேண்டும் எனவும், கிறீஸ்து திருச்சபை மீதுள்ள அன்பினால் தம்மையே ஒப்புவித்தார். அதுபோல் கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் தம் உடலெனக் கருதி வாழ வேண்டும், அன்புசெய்ய வேண்டும், விட்டுக்கொடுக்க வேண்டும், தியாக மனப்பான்மையுடன் வாழ வேண்டும், இருவரும் பிரிந்து வாழக்கூடாது எனவும், அவ்வாறு பிரிந்திருந்தால் மறுமணம் செய்யக்கூடாது எனவும் கூறுகிறார். எவரும் தம் உடலை வெறுப்ப தில்லை; அதைப் பேணி வளர்க்கிறார். கிறீஸ்துவும் திருச்சபையைப் பேணி வளர்க்கின்றார். எனவே அவரின் உடலின் உறுப்புகளாகிய நாமும் அதனையே கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

மேலும், சமூக ஒற்றுமை பற்றிக் கூறும் பவுல் ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இயேசுக் கிறீஸ்துவுடன் இணைந்து அவரது இரக்கத்தின் மூலம் அருகில் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள். அவரே இரு இனத்தாரையும் பிரித்து நின்ற பகைமை எனும் சுவரை தனது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாகத் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத் தினார். எனவே இனி நீங்கள் அன்னியரல்ல, வேற்று நாட்டவரும் அல்ல, இறைமக்கள் சமூகத்தின் உடன் குடிமக்கள் என்கிறார்.

கிறீஸ்துவை மூலைக்கல்லாய்க் கொண்டு கட்டப்பட்ட கட்டிடம் நாம். இனி நமக்குள் யூதரென்றும், கிரேக்கரென்றும், அடிமையென்றும், உரிமைக் குடிமகன் என்றும், ஏழை, பணக்காரன் என்ற எந்தப் பிரிவினையும் இருக்கக் கூடாது. நாம் அனைவருமே ஒரே திருமுழுக்கினைப் பெற்றுள்ளோம். ஒரே இரத்தத்தால் கழுவப்பட்டுள்ளோம். கிறிஸ்து எம் அனைவரின் பாவங்களுக்காகவுமே இறந்தார். அவர் எத்தகைய பாகுபாடுகளும் பார்க்கவில்லை. எனவே அவருடைய மரணத்தால் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள நாம் அவரைப்போல் வாழ்வோம். குடும்ப, சமூகங் களில் அவர் காட்டிய ஒற்றுமையினைக் கடைப் பிடிப்போம். பிளவுகளைத் தகர்த்தெறிவோம். திருச் சபையில் ஒற்றுமையினைக் கட்டியெழுப்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**500** ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் காட்டில் மறைந்து கிடந்த நகரமும் உலகின் அற்புதக் கோயில்களில் ஒன்றும் 1861ல் யதேச்சையாகக் கண்டறியப்பட்டன. அதுதான் கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட்.

கமோர் பேரரசின் தலைநகராகப் புதிதாகக் கட்டப்பட்டது. 802ம் ஆண்டு முதல் 854ம் ஆண்டுவரை வாழ்ந்த மன்னர் ஜெயவர்மனால் உருவாக்கப்பட்ட உன்னத நகரம் இது.

8 மைல் சுற்றளவுக்கு சதுரமாக அமைந்தது. ஒவ்வொரு பக்கமும் 2 மைல் நீளக் கோட்டைச் சுவர்களும், அதைச் சுற்றி அகழிகள் நிரம்பிய கோட்டைச் சுவர்களும் கொண்டது. கோட்டைக்குள் மன்னர் குடும்பத்தினர் மட்டுமே வாழ்ந்தனர். மக்கள் கோட்டைக்கு வெளியே வசித்தனர். கோட்டைக்குள் செல்ல நான்கு புறமும் நான்கு பிரமாண்டமான வாயில்கள். அதன் வழியே செல்லும் சாலை மத்தியில் மன்னர் மாளிகையில் கூடும். பாதையின் இருமருங்கும் அமைந்த கைப்பிடிச் சுவரில் அற்புதமான சிற்பங்கள் அணி செய்தன.

மிகவும் நாகரிகமடைந்த சமுதாய மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளும், இந்துக் கடவுளர்களின் உருவங்களும் கொண்டவை. கோட்டைக்கு வெளியே ஒரு மைல் தூரத்தில் அங்கோர் வாட் ஆலயம் அமைந்திருந்தது. 12ம் நூற்றாண்டில் அரசு செய்த சூரியவர்மனால் கட்டப்பட்டது. கோயிலைச் சுற்றிலும் ஒரு மைல் நீளக் கோட்டைச் சுவரும், அகழியும் உள்ளன. அற்புதமான இக்கோவில் உலகின் அழகான கட்டிடங்களில் ஒன்று.

சூரியவர்மன் மறைவுக்குப் பின் லாவோசிலிருந்து படையெடுத்துவந்து நகரைக் கைப்பற்றினர். அடுத்து 150 ஆண்டுகளுக்குப் பல படையெடுப்புகளைச் சமாளிக்கவேண்டியிருந்தது. 1434ல் தலைநகரம் நாம்பென்னுக்கு மாற்றப்பட்டது. அங்கோர் மக்கள் நினைவிலிருந்தும் மறைந்துவிட்டது.



# காட்டில் மறைந்த கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள், வாசித்தால் மட்டும் போதாது, அதை யோசித்து, நல்லவற்றை மனதிற் பதித்து, நடைமுறைப் படுத்திப் பயனடைவதுடன் மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு, மற்றவர்களும் பயனடைய வழிகோல வேண்டும். வானொலி கேட்கிறோம், தொலைக்காட்சி பார்க்கிறோம், கண்ணுக்கும், காதுக்கும் வேலை உண்டு. வாசிப்பதால் வாய்க்கும் வேலை உண்டு. வாசிப்பதால் அறியாமை அகன்று அறிவு பெருகும். தேவையற்ற பேச்சுகள் குறைவதற்கு இதனால் வாய்ப்புண்டு.

உங்களைப் பிறர் 'நடமாடும் நூலகம்' என்று அழைக்கும் அளவிற்கு அறிவுப் பொக்கிஷம் உங்களிடம் இருக்குமானால் நீங்கள் வாசித்து வாசித்தே மேதையாகிவிட்டீர்கள் என்பது பொருள். "உங்களுடன் உரையாடிய சில நிமிடங்களில் உங்களிடம் இருந்து அனேக விடயங்களை இன்று நான் தெரிந்துகொண்டேன். இன்று எனக்கு ஒரு நல்ல நாள்" இவ்வாறு யாராவது உங்களிடம் கூறியதுண்டா? இல்லை என்றால் உங்களிடம் வாசிக்கும் பழக்கமும் இல்லை, உலக அறிவும் இல்லை. எனவே இனியாவது வாசித்து வாசித்து அறிவைப் பெருக்க விடா முயற்சி செய்யுங்கள். இதற்கெல்லாம் ஆசிரியர் தேவையில்லை. இந்த நவீன யுகத்தில் இன்ரநெற் மூலமும் தகவல்களை அறியலாம். ஆனாலும் அதில் புகமுன் நீங்கள் அன்னமாக மாறவேண்டும். பாலைப் பருகிவிட்டு தண்ணீரை விட்டுவிடவேண்டும்.

வாசிப்பது அனைவருக்குமே சுலபமானது, வசதியானது. புத்தகம் முதல் முதலில் களிமண் சுவடியாகவே ஆரம்பமானது. களிமண்ணிற்தான் எழுத்துகளைப் பதித்தார்களாம். அதன் பின்புதான் கற்களிற் பதித்தார்கள். அதன் பின்பு பனை ஓலைகளில் காவியங்கள், இலக்கியங்கள், காப்பியங்கள் எழுதப்பட்டன. உலக மறை என்று போற்றப்படும் திருக்குறள் கூட முதல் முதலில் ஓலையில்தான் எழுதப்பட்டது.

பின்புதான் பேப்பரில் எழுதும் பழக்கம் வந்தது. பேப்பரில் எழுதுவதை முதல் முதலில் எகிப்தியர்கள்தான் கண்டுபிடித்தார்களாம். "Cyprus Papyrus" எனும் செடியில் இருந்து Papyrus தயாரித்து அதில் எழுதினார்களாம். அதை எகிப்து வெளிநாடுகளுக்கும் அனுப்பியதாம். ஒரு தடவை எகிப்து நாட்டு மன்னன் இன்னோர் நாட்டு மன்னனுடன் சண்டை பிடித்துவிட்டு பேப்பரை அனுப்பாது தடை செய்தானாம். அந்த மன்னன் மாற்று வழியைக் கண்டுபிடித்து மிருகத் தோல்களில் எழுதினார்களாம்.

உலகில் முதல் முதல் புத்தகத்தை "வாங்கி" என்ற சீனர் பேப்பரில் அச்சிட்டு வெளியிட்டாராம். இது ஆறு பக்கங்களை மட்டுமே கொண்டிருந்ததாம். இப்போது தேவையான மொழிகளில் தேவையான புத்தகங்கள் உண்டு.

உலகிலேயே மிகப்பெரிய புத்தகம் எது தெரியுமா? "த லிட்டில் றெட்" (the Little Red) வில்லியம் பி உட் என்பவர் எழுதியுள்ளார். இது 1967ல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் நீளம் 10அடி. 364 மெற்றிக் தொன் நிறை உள்ளது. இதன் அகலம் 7 அடி 2 அங்குலமாகும். உலக சாதனைகளைப் பதியும் கின்னஸ் புத்தகத்தை ஆரம்பித்தவர் 1955ல் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பேர்ல் டு எஸ்பேக் என்பவரே. கின்னஸ் புத்தகத்தை வெளியிடும் முகவரி இதோ நீங்களும் சாதனை புரிய வேண்டின் தொடர்பு கொள்ளுங்கள்

GUINNESS WORLD RECORDS,
338, EUSTON ROAD,
LONDON NWI 3BD, ENGLAND



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தினம் தினம் வாசியுங்கள், உங்கள் வருகைக்காகவே வாசிகசாலைக் கதவுகள் திறந்திருக்கிறது. ஜேர்மனியிற்கூட 1820ல் இருந்து லைப்சிக் நகரில் தமிழ் நூலகம் ஒன்று இயங்கி வருகிறதாம். உலகிலேயே மிகப் பெரிய நூலகம் அமெரிக்க காங்கிரஸ் நூலகம்தான்.

எனவே அதிகம் வாசிக்கக் கற்றுக்கொண்டால் அறிவுக் களஞ்சியமாவீர்கள். அனேக அறியாமைகளும் அகன்றுவிடும். தனிமை என்ற ஏக்கமும் இருக்காது. கதைகளை மட்டுமல்ல, சகலவிதமான புத்தகங்களையும் வாசியுங்கள். "வாசி பின் யோசி"

– வயலற் சந்திரசேகரம் –



## பூமியிலிருந்து சூரியனுக்கு

பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரம் சுமார் 150 மில்லியன் கிலோமீற்றர். இந்தத் தூரத்தை ஒரு மணிக்கு 1000 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் ஒரு ஜெட் விமானத்தில் நிற்காமல் பயணித்தால் பதினேழு வருடங்களில் கடக்கலாம்.








## விவிலியம் கற்போம் – 67 விடைகள்

பாளையத்துக்கு, இஸ்ரயேல், ஆண்டவரை, குற்ற ஈட்டு, புனிதப் பொருள்களை, ஏப்பா, புனித நீர், கசப்பு நீரையும், பெண்ணின், தூயவளாக

## அறிவை வளர்ப்போம் – 67 விடைகள்

1) எத்தியோப்பியா 2) திபெத் 3) கார்ல் மாக்ஸ்
4) தென்னாபிரிக்கா 5) ஏரைத் தேடு 6)விளித் தொடர்

29ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30- 09 - 2008




# விவிலியம் கற்போம் - 69

(எண்ணிக்கை 7:1–89)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே திரு உறைவிடத்தை எழுப்பிமுடித்து, அதனை அதன் அனைத்துப் பொருள்களோடும் திருப்பொழிவு செய்து அர்ப்பணித்து, பீடத்தையும் அதன் துணைக் கலன்களோடு ............................................ செய்து அர்ப்பணித்த நாளில் கணக்கிடப்பட்டோருக்கு மேற்பார்வையாளராயிருந்த இஸ்ரயேல் தலைவர்கள் காணிக்கை கொணர்ந்தனர். ஆண்டவர்...................................... "சந்திப்புக் கூடாரப் பணியைச் செய்வதற்குப் பயன்படும்படி இவற்றைப் பெற்றுக்கொள்; ஒவ்வொருவரின் பணிக்கு ஏற்ப இவற்றை லேவியரிடம் ஒப்படைப்பாய்". அவரும் அவ்வாறே செய்தார். ......................................... புதல்வருக்கு நான்கு வண்டிகளையும், எட்டு மாடுகளையும் கொடுத்தார். ஆண்டவர் மோசேயிடம் "நாளுக்கு ஒருவராகத் தலைவர்கள் தங்கள் காணிக்கைகளைப் பலிபீட ........................................ கொண்டுவரட்டும்" என்றார். முதல் நாளில் தம் காணிக்கையைக் கொண்டுவந்தவர் நகசோன், இவர் யூதா குலத்து அம்மினதாபின் மகன். இரண்டாம் நாளில் காணிக்கை கொண்டுவந்தவர் இசக்கார் தலைவரான சூவாரின் மகன்......................................... இவ்வாறாக பன்னிரண்டாம் நாள்வரை ஆனது. பன்னிரண்டாம் நாள்; நப்தலி மக்களின் தலைவர் அகிரா இவர் ஏனானின் மகன்; அவர் காணிக்கை: தூயகச் செக்கேலின்படி ஒன்றரை கிலோகிராம் நிறையுடைய .......................................... ஒன்று, எண்ணூறு கிராம் நிறையுடைய வெள்ளிக்கலம் ஒன்று- உணவுப் படையலுக்காக அவை நிறைய எண்ணெயில் பிசைந்த மிருதுவான மாவு இருந்தது. நூற்றுப் பதினைந்து கிராம் நிறையுடைய ..................................ஒன்று; அது நிறையத் தூபம் இருந்தது. பலிபீடம் திருப்பொழிவு செய்யப்பட்ட நாளில் வந்த அர்ப்பணக் காணிக்கை, வெள்ளித் தட்டுகள் 12, வெள்ளிக் கலங்கள் 12, பொன் பாத்திரங்கள் 12, தூபம் நிறைந்திருந்த பொன் பாத்திரங்கள் ................................... பாவம் போக்கும் பலிக்காக வெள்ளாட்டுக் கிடாய்கள் பன்னிரண்டு. நல்லுறவுப் பலி செலுத்துவதற்கான மொத்தக் கால்நடைகள்: காளைகள் இருபத்து நான்கு; ............................................ அறுபது. வெள்ளாட்டுக் கிடாய்கள் அறுபது, ஓராண்டு செம்மறிக் கிடாய்கள் அறுபது. ஆண்டவருடன் பேச மோசே சந்திப்புக் கூடாரத்தினுள் சென்றார். இரு ............................................. இடையே உடன்படிக்கைப் பேழையின் மேலிருந்த இரக்கத்தின் அரியணையிலிருந்து பேசிய குரலை அவர் கேட்டார்; ஆண்டவர் அவருடன் பேசினார்.

விடைகள் : வெள்ளித்தட்டு, ஆட்டுக் கிடாய்கள், கெருபுகள், பன்னிரண்டு, பொன் பாத்திரம், மெராரி, நத்தானியேல், திருப்பொழிவு, அர்ப்பணத்திற்காக, மோசேயிடம்

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 69

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. மருத்துவ அறிவியலின் தந்தை இவர்
   (ஹிப்போகிரேட்டஸ், சோக்கிறட்டீஸ், டாக்டர் ஹனிமன்)

2. மனித உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை
   (206, 210, 200)

3. அடால்ப் ஸாக்ஸ் என்பவர் கண்டுபிடித்த இசைக்கருவியின் பெயர்
   (பியானோ, கிளாரினட், ஸாக்ஸபோன்)

4. சர்வாதிகாரி முசோலினி ஆண்ட நாடு
   (பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி)

5. சார்க் அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளின் எண்ணிக்கை
   (எட்டு, ஏழு, ஒன்பது)

6. சாரைப்பாம்பு என்பது
   (பண்புத் தொகை, இருபெயரொட்டுப் பண்புத் தொகை, உவமைத் தொகை)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 69**

**தொண்டன்**

**அ. பெ. எண் - 44**

**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாதிந்த நினைவலைகள்

ஏழா ண்டுகள்!
எப்படித்தான் ஓடி மறைந்தனவோ!
நேற்றென் றாற்போ லிருக்கிறது!
நிறைந்த வாழ்வு தந்தாய் - எங்கள்
நினைவலைகளில் வாழ்வு கொண்டாய்!
அம்மா! எங்கள் தெய்வமே!
மரணமுனக் கில்லை
மண்ணுலகில் எங்களுடனே வாழுகின்றாய்!
சுழலுமிந்த பூமிப்பந்து ஓயும் வரை
ஓயாதிந்த நினைவலைகள்!
என்றும் நினைவுடன் வாழும்
உங்களது அன்பு நெஞ்சங்கள்!

அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

தோற்றம்
1944 * 08 * 31



மறைவு
2001 * 08 * 11

**திருமதி ஜெயராணி மாணிக்கராஜா**

இல:02, ஞானசூரிய சதுக்கம், திருமலை வீதி,மட்டக்களப்பு.தொ.பே: 065 2222622.

---

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- மைக்கல் கிறிஸ்ரெலா
  073 A
  சொறிக்கல்முனை
- T. யோன்சன்
  விமான நிலைய வீதி
  திருப்பெருந்துறை
  மட்டக்களப்பு

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 19 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  ப. எல்றோய்
  333, அன்புவழிபுரம்
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  M. எணஸ்ட் சத்துரங்க
  22, புதிய எல்லை வீதி
  பெரிய ஊறணி
  மட்டக்ளப்பு
- **3ம் பரிசு** - 100/=
  வு. நொய்லின்
  -மாட்டில்
  மாயழகு வீதி
  அக்கறைப்
  -பற்று - 9

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ — ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org